# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.19/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | சுதா |
| Father's/Husband Name: | சந்திரசேகரன் |
| Village : | பிம்பலூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 35/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 30.01.2024.

**(1969-ம் ஆண்டின் 54 வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. P. தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311-ன் கீழ் சாட்சியை மீண்டும் அழைக்க மனு செய்துக்கொள்ளப்பட்டு 02.01.2024 தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார். ) ( எதிரி முருகன் ஆஜர்)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1(i) சம்பவத்தின் போது நான் வேப்பந்தட்டையில் தான் தங்கியிருந்தேன். குற்றம் நடந்த இடத்திற்கும் வேப்பந்தட்டைக்கும் சுமார் 14 கி.மீ இருக்கும். சம்பவ இடத்திற்கு நான் உதவியாளருடன் சென்றேனா என்றால் இல்லை நான் என் கணவருடன் சென்றிருந்தேன். புகாரை நான் தான் எழுதினேன். என்ன தகவல் கிடைத்தது என்றால் மணல் திருடுவதாக தகவல் கிடைத்தது. ஆற்றின் எந்த திசையில் வண்டி நிறுத்தப்பட்டது என்றால் ஆற்றுக்குள் நின்று கொண்டிருந்தது. ஆற்றிற்கு வலது பக்கம் தான் பாதை இருந்தது.

(ii) திருட்டிற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் எந்த வகை வாகனம் என்றால், பதிவெண் இல்லாத பொலிரோ பிக்கப் வண்டி ஆகும். வண்டியின் கலர் என்ன

என்றால், மஞ்சள், வெள்ளை. போலிசார் என்னை என்று விசாரித்தனர் என்றால் புகார் கொடுத்த அன்றே விசாரித்தனர். விசாரித்ததை கணினியில் தட்டச்சு செய்தார்களா அல்லது கையில் எழுதிகொண்டார்களா என்றால், கையில் எழுதிகொண்டார்கள். நான் மணல் திருட்டிற்கு பயன்படுத்திய வாகனத்தில் காவல் நிலையம் செல்லவில்லை, டூவிலரில் தான் சென்றேன். டூவிலரில் சென்ற விசயத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் அவர்கள் விசாரிக்கவில்லை, அதனால் சொல்லவில்லை.

(iii) சிமெண்ட் சாக்கில் என்ன நிறுவனத்தின் பெயர் எழுதப்பட்டிருந்தது என்று நான் கவனிக்கவில்லை. திருட்டு மணலையும், வாகனத்தையும் போலிசார் அவர்களது செல்போனில் படம் எடுத்து கொண்டார்கள். சீசர் மகஜரில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால், வாங்கினார்கள். என் உதவியாளரிடம் சீசரி மகஜரில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பணியில் இருந்தபோது எத்தனை மணல் திருட்டை பிடித்துள்ளேன் என்றால், 3 திருட்டை பிடித்துள்ளேன். சம்பவம் பற்றி உயர் அதிகாரிக்கு எழுத்து மூலமாக தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. போன் மூலம் தகவல் கொடுத்தேன்.

(iv) VAO என்ற முறையில் புகார் கொடுத்தது பற்றி தனியே கோப்பை பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு நான் இவ்வழக்கில் கோப்பை பராமரிக்கவில்லை. திருடப்பட்ட மணலின் மதிப்பை எவ்வாறு மதிப்பிட்டேன் என்றால், தோராயமாக மதிப்பிட்டேன். முதல் தகவல் அறிக்கையில் என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். FIR எனக்கு இலவசமாக கொடுக்கப்பட்டதாக என்றால் இல்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், புள்ளியல் கணக்கிற்காக போலிசார் கேட்டு கொண்டதற்காக எதிரிக்கு எதிராக நான் பொய்யாக புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.19/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | ஜோதிவேல் |
| Father's/Husband Name: | கந்தசாமி |
| Village : | பிம்பலூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 58/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 30.01.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. P. தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311–ன் கீழ் சாட்சியை மீண்டும் அழைக்க மனு செய்துக்கொள்ளப்பட்டு 02.01.2024 தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார். ) ( எதிரி முருகன் ஆஜர்)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1(i) 11.07.2022–ம் தேதி ஆற்றில் மணல் அடிப்பதாக VAO எனக்கு தகவல் கொடுத்தார். சம்பவ இடத்திற்கு எப்போது சென்றேன் என்றால் காலை 05.30 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்தில் நான் சென்றபோது யார் யார் இருந்தார்கள் என்றால், யாரும் இல்லை, எதிரி மட்டும்தான் இருந்தார். சம்பவ இடத்திற்கு நானும், VAO வும் சென்றோம். சம்பவ இடத்தில் இருந்து மணல் திருடப்பட்ட வண்டியை எதிரி ஓட்டி சென்றார். நானும், VAO வும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. கைப்பற்றுதல் மகஜர் எதிலும் நான் கையொப்பம் வாங்கவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், புள்ளியல் கணக்கிற்காக போலிசார் கேட்டு கொண்டதற்காக

எதிரிக்கு எதிராக VAO கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக VAO எனது உயர் அதிகாரி என்பதால், அவருக்கு ஆதரவாகவும், எதிரிக்கு எதிராகவும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை